இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25-08-2025

# துரோக கொத்தடிமைக் கூட்டணி!

**“தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது வெறும் அரசியல் கூட்டணி அல்ல. தமிழ்நாட்டை வளர்ச்சி, முன்னேற்றம் அடையச் செய்யும் கூட்டணி'' என்று திருநெல்வேலியில் வைத்து பொய்மூட்டையை அவிழ்த்து விட்டுள்ளார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் சேர்ந்து என்ன வளர்ச்சியைக் கொடுத்துள்ளன என்பதையும் அமித்ஷா சொல்லி இருந்தால் பாராட்டலாம். தமிழ்நாட்டுக்கு கெடுதல் செய்வது ஒன்றையே வழக்கமாக வைத்துள்ளது பா.ஜ.க. அதற்கு தலையாட்டி கொத்தடிமையாக இருந்துள்ளது அ.தி.மு.க. இத்தகைய துரோகக் கூட்டணிதான், இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.**

“புண்ணிய பூமியான தமிழ் மண்ணில் தமிழ் மொழியில் பேச முடியாதது வருத்தமளிக்கிறது. இந்த தமிழ் மண் வரலாறு, வீரம், பண்பாடு மிகுந்தது. இந்த மண்ணை வணங்குகிறேன்” என்று சொல்லி தனது உரையைத் தொடங்கி இருக்கிறார் அமித்ஷா. சமஸ்கிருதத்துக்கு மகுடம் சூட்டி, தமிழின் தலையில் மண்ணைப் போட்டது தானே ஒன்றிய பா.ஜ.க. அரசு?

தமிழை விட சமஸ்கிருத வளர்ச்சிக்காக 17 மடங்கு அதிக நிதியை ஒதுக்கிவிட்டு, ‘தமிழில் பேச முடியாதது வருத்தமளிக்கிறது’ என்று சொல்வது மோசடித்தனம் அல்லவா? உள்துறை அமைச்சருக்கு தமிழ் தெரியாமல் இருப்பதும், தமிழில் பேச முடியாததும் நல்லது தான்.

‘இந்திதான் அனைத்துக்கும் மூலமொழி’ என்று கண்டுபிடித்துச் சொன்னவர் இதே அமித்ஷா அவர்கள்தான். இதை விட தமிழுக்குச் செய்யும் துரோகம் இருக்க முடியுமா?

ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வாக்கர் எழுதுகிறார்; “மொழிப் பிரச்சினைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது; சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக வருகின்ற காலம் வரை, இந்திக்கே நாம் முன்னுரிமை தந்து, நமது வசதிக்காக ஆட்சி மொழியாக்கிக் கொள்ள வேண்டும்.” (As a solution to the problem of ‘Lingua franca,’ till the time Sanskrit takes that place / we shall have to give priority to Hindi on the score of convenience) என்பதே அவர்களது கொள்கையாகும். ‘நாடு முழுவதும் சமஸ்கிருதத்தை கட்டாயப் பாடமாக்க வேண்டும்’ என்று ஜனசங்கம் தீர்மானம் போட்டுள்ளது. அதனால் தான் சமஸ்கிருத வளர்ச்சிக்காக பல்லாயிரம் கோடியை பா.ஜ.க. அரசு ஒதுக்கீடு செய்து கொண்டு இருக்கிறது. இதனை மறைக்கத் தான் ‘தமிழில் பேச முடியவில்லையே’ என்ற நாடகங்கள் ஆகும்.

இந்தத் துரோகத்தை மறைக்கத்தான் அ.தி.மு.க. கொத்தடிமைகள் அமித்ஷாவால் மிரட்டி பணிய வைக்கப்பட்டுள்ளார்கள். இந்திக்கு ஆதரவாக அமித்ஷா கருத்துச் சொன்னபோது, “அது அவரது சொந்தக் கருத்து” என்று சொன்னவர்தான் கொத்தடிமை பழனிசாமி.

**சிறுபான்மை சமூகத்துக்கும் இலங்கைத் தமிழர்க்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மாநிலங்களவையில் ஆதரித்த கட்சிதான் அ.தி.மு.க. மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் அ.தி.மு.க. எம்.பி.க்கள். அன்றைக்கு அ.தி.மு.க.வைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களும், பா.ம.க.வைச் சேர்ந்த அன்புமணியும் ஆதரித்து வாக்களிக்காமல் இருந்திருந்தால் இந்த சட்டமே நிறைவேறி இருக்காது என்பதுதான் உண்மை.**

“குடியுரிமைச் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையே? எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்?” என்று கொத்தடிமை பழனிசாமி பா.ஜ.க.வின் ஊதுகுழலாக அன்றைய தினம் கேட்டார்.

மூன்று வேளாண் சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வந்தபோது, “அது மிக நல்ல சட்டம், அது பற்றி நான் விவாதிக்கத் தயார், என்னிடம் விவாதிக்க வாருங்கள்” என்று நிருபர்களையே சவாலுக்கு அழைத்தவர்தான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக போராடும் எட்டு மாநில விவசாயிகளை, ‘அவர்கள் விவசாயிகள் அல்ல, புரோக்கர்கள்’ என்று கொச்சைப்படுத்தினார் பழனிசாமி.

‘நீட் தேர்வு வைத்தால் எழுதித்தான் ஆக வேண்டும். அதில் எந்த சந்தேகமும் இல்லை’ என்று சொன்னவர் தான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. நீட் விலக்கு மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஒப்புக்கு அனுப்பி விட்டு, அதை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியதைக் கூட ஒன்றரை ஆண்டுகள் வெளியில் சொல்லாமல் வைத்திருந்தவர்தான் பழனிசாமி.

முதலமைச்சர் பதவியில் இருந்து இறக்கப்பட்ட பிறகும், “நீட் தேர்வில் இருந்து விலக்கு எல்லாம் கிடையாது. எல்லாரும் எழுதித்தான் ஆக வேண்டும். உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்துவிட்டது. அதன்படி தான் நடத்துகிறோம். அனைத்து மாநிலத்தவரும் எழுதித்தான் ஆக வேண்டும்” என்று பேசினார் பழனிசாமி.

**திராவிடத்தை விமர்சித்தும், பேரறிஞர் அண்ணாவை விமர்சித்தும் காட்சிகள் ஒளிபரப்பப்பட்ட மேடையில் வெட்கமில்லாமல் பழனிசாமியின் அ.தி.மு.க. உட்கார்ந்து இருந்தது. இதெல்லாம் கொத்தடிமைத்தனத்தின் தொடர்ச்சி அல்லவா?**

**தமிழுக்கும், தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம். அதனைக் கண்டும் காணாமல் கொத்தடிமையாகக் கிடப்பது அ.தி.மு.க.வின் பழக்கம்.**

**அது வளர்ச்சி முன்னேற்றக் கூட்டணி அல்ல. துரோக கொத்தடிமைக் கூட்டணி ஆகும்.**

# திருப்பத்தூரில் அண்ணா அறிவகம் வார்ரும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை, ஆக. 25 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் அண்ணா அறிவகம் வார்ரூமினை கூட்டுறவுத் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ், விஜய கதிரவன், மாவட்டத் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து ஆகியோர் வார்ரும் குறித்து விளக்கி கூறினார்கள். சமூக வலைதள பொறுப்பாளர் ராஜேஸ்வரி சேகர் மற்றும் துணை அமைப்பாளர்கள் வினோத், சுப.அன்பரசன், கலா காசிநாதன், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பாலசுப்ரமணியன், சிவா, கண்ணன், பாலா, சதீஷ், இந்துமதி திருமுருகன், பசும்பொன் பாலா, அபுதாஹிர், திருப்பத்தூர் பேரூர்க் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் மு.க.தமிழரசு, அவரது துணைவியார் திருமதி மோகனா தமிழரசு மற்றும் கழக மாநில இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா ஆகியோர் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ மாதந்தோறும் கிடைப்பதால்

# தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு கடன் வாங்குவதை நிறுத்திவிட்டோம்!

## மாதந்தோறும் ரூ.1000 பெறும் குடும்பத் தலைவிகள் மகிழ்ச்சி – முதல்வருக்கு நன்றி!

சென்னை, ஆக. 25-

தி.மு.க. அரசின் மகளிர் உரிமைத்தொகை மாதந்தோறும் கிடைப்பதால், தங்களின் அன்றாட தேவைகளுக்கு கடன் வாங்குவதை நிறுத்திவிட்டதாக, பெண்கள் தெரிவித்துள்ளதாக, ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில், பெண்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ தொடங்கப்பட்டதை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 14 லட்சம் பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் வறுமையிலுள்ள பெண்கள் தங்கள் வாழ்வாதாரங்களை நிறைவேற்றி வருவதாக கூறப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் வசிக்கும் பெண்களிடம் இது தொடர்பாக the hindu ஆங்கில நாளிதழ் கணக்கெடுப்பு நடத்தியுள்ளது. அதில், தி.மு.க. அரசின் மகளிர் உரிமைத்தொகை மாதந்தோறும் கிடைப்பதால், தங்களின் அன்றாட தேவைகளுக்கு கடன் வாங்குவதை நிறுத்திவிட்டதாக, நாகை மாவட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர். மேலும், தங்களின் குழந்தைகளின் படிப்புகளுக்கு ஆயிரம் ரூபாய் உதவித்தொகை மிகுந்த உதவியாக இருப்பதாகவும் மகளிர் கூறியுள்ளனர். தகுதியான விடுபட்ட பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களை உடனடியாக ஆய்வு செய்து 2 மாதத்திற்குள் அவர்களுக்கு உரிமைத்தொகை வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அதன்படி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டவர்களுக்கென, 9 ஆயிரம் இடங்களில் முகாம்கள் நடைபெற்றுள்ளதாகவும், இதில், 15 லட்சம் பேர் வரை புதிதாக சேரக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பீகாரில் வாக்காளர் பட்டியல் மோசடி குறித்து மக்களிடையே விழிப்புணர்வு!

# வாக்காளர் அதிகார யாத்திரையில் இருசக்கர வாகன பேரணி!

## ராகுல் காந்தி – தேஜஸ்வி யாதவ் பைக்கில் சென்றனர்!

பாட்னா, ஆக. 25-

பீகாரில் வாக்காளர் அதிகார யாத்திரையின் ஒரு பகுதியாக, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ராஷ்டிரிய ஜனதா தள கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர், பல்லாயிரக்கணக்கானோருடன் இருசக்கர வாகன பேரணியில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியலில் மோசடி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் திருடப்பட்டன ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பீகாரில் 16 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். இந்த நடைபயணத்திற்கு, ‘வாக்காளர் அதிகார யாத்திரை’ என பெயரிடப்பட்டுள்ளது. இந்த யாத்திரையின் ஒரு பகுதியாக, பீகாரின் பூர்ணியா மாவட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவுடன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ராஷ்டிரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீகார் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவ் ஆகியோர், இருசக்கர வாகன பேரணியில் ஈடுபட்டனர்.

### குடியரசு துணைத் தலைவர் தேர்தல்:

# இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் சுதர்சன் ரெட்டி சென்னை வருகை!

சென்னை, ஆக. 25 –



குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் சுதர்சன் ரெட்டி சென்னை வந்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜெகதீப் தன்கர், கடந்த மாதம் 21ஆம் தேதி தனது பதவியை திடீரென ராஜினாமா செய்தார். இதனையடுத்து, அடுத்த மாதம் 9ஆம் தேதி குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. பா.ஜ.க. கூட்டணி சார்பில் சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அதே போன்று, இந்தியா கூட்டணி சார்பில் வேட்பாளராக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், சுதர்சன் ரெட்டி சென்னை வந்துள்ளார். தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, வில்சன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டவர்கள் அவரை வரவேற்றனர். கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று மாலை சந்தித்து ஆதரவு திரட்டினார். இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களையும் சுதர்சன் ரெட்டி சந்தித்து ஆதரவு திரட்டினார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் கலை பண்பாட்டு துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடைபெற உள்ள நெல்லை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சியினை கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் முரசு கொட்டி துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் உள்பட பலர் உள்ளனர்.